# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 04 ஏப்ரல் 2025 தனிபிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-
Vol : 11 Issue No : 04 April 2025 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-



கிறிஸ்துவுக்குள் எல்லாரும்
உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

I கொரிந்தியர் 15:22

## நூறு சதவீதம் தேர்ச்சி!



நான் நெய்வேலியில் உள்ள தனியார் பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை செய்கிறேன். எங்கள் பள்ளியில் 10-ம் வகுப்பில் இரண்டு மாணவர்கள் மட்டுமே நன்றாக படிக்கிறவர்கள். மற்றவர்கள் அனைவரும் படிப்பில் பின் தங்கிய நிலையில் இருந்தார்கள். அரசு தேர்வு எழுதுவதற்கு முன் திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்து 10-ம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்காக ஜெபிக்கும்படி **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் சொன் னேன். ஐயா அவர்கள் பாரத்துடன் ஜெபித்துவிட்டு centum ரிசல்ட் கிடைக்கும் என சொல்லி அனுப்பினார் கள். கர்த்தர் அப்படியே இரங்கினார். எங்கள் பள்ளியில் 10-ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் தேர்வில் வெற்றி பெற்று centum ரிசல்ட் எடுக்கக் கர்த்தர் உதவிசெய்தார். அத்துடன் தமிழ்நாடு அரசிடமிருந்து நூறு சதவீத தேர்ச்சிக்கான award வாங்கவும் கர்த்தர் இரங்கினார். தேவனுக்கே மகிமை! எங்கள் மாணாக்கருக்காக ஜெபித்த ஐயா அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.



**- சகோதரி. இவா ஜாஸ்மின், நெய்வேலி.**

## அரசாங்க வேலை கிடைத்தது!



என் மகளுக்கு அரசாங்க வேலை கிடைக்க கடந்த 5 வருடங்களாக பல முயற்சிகள் செய்தோம். பணம் செலவழித்தோம். ஆனால் வேலை கிடைக்க வில்லை. இந்த வருடம் பிப்ரவரி மாதம் மதுரையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து என் மகளுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் சொன்னோம். ஐயா ஜெபித்து விட்டு வேலை கிடைக்கும் என சொல்லி அனுப்பி னார்கள்.

அதன்பின் என் மகள் employment office-க்கு ஏதேச்சையாக செல்ல வேண்டியிருந்தது. அப்பொழுது அங்கிருந்த அதிகாரிகள் என் மகளுடைய கல்வித்தகுதியை குறித்து விசாரித்து விட்டு உடனே வேலையில் சேருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். நாங்கள் எந்த செலவும் செய்யாமல் யாரையும் போய் பார்க்காமல் மதுரையில் உள்ள இராஜாஜி அரசு மருத்துவமனையில் ஒரு வருட பயிற்சி மற்றும் சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். எளியவர்களாகிய எங்களுக்கு இரங்கிய கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஐயாவின் உருக்கமான ஜெபத்திற்காக நன்றி கூறுகிறேன். **- திருமதி. நாகரெத்தினம், மதுரை.**

dranandastira@mojindia.org

# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 11 ♦ ஏப்ரல் 2025 ♦ இதழ் 4


## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான சகோதர, சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்! இந்த மாதத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பு பண்டிகையை சிறப்பிக்கும் உங்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து உங்கள் வாழ்விலும் இயேசு கிறிஸ்து தம் உயிர்ப்பின் வல்லமையால் நிறைத்து காப்பாராக!

**அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்.** (மத்.28:2)

மரித்த இயேசு கிறிஸ்துவை கல்லறையில் வைத்து கல்லறையை பெரிய கல்லினால் மூடி, முத்திரையிட்டு ரோம போர்வீரர்களை காவலுக்கு வைத்தனர். இயேசுவின் வாழ்க்கை இத்துடன் முடிந்துவிட்டது என யூதர்கள் நினைத்தனர். ஆனால் 3–ம் நாள் இயேசு உயிர்த்தெழுந்தார். அவர் உயிர்த்துவிட்டதன் அடையாளமாக கல்லறையை மூடியிருந்த பெரும் கல் தூதர்களால் புரட்டி தள்ளப்பட்டது. ஆம். ஒரு புல்டோசர் கன்மலையை நொறுக்கி கற்களை தகர்த்துப்போடுகிறது போல கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலும் உள்ள தடையாய் இருக்கிற கற்களை அகலச்செய்வார். உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை பெற தடையாக இருக்கிற எல்லா கற்களையும் நீக்கி, மூடப்பட்ட வாசல்களைப் கர்த்தர் தம் தூதர்களை அனுப்பி திறப்பார். ஆசீர்வாதங்களை மூடி வைத்துள்ள சாத்தானின் கிரியைகள், சூழ்நிலைகள், மனிதர்கள் அனைத்தையும் நொறுக்கிப்போடுவார்.

மார்ச் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். ஏப்ரல் மாதத்தில் கோயம்புத்தூர், நாங்குனேரி, கள்ளக்குறிச்சி, மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். கன்னியாகுமரியில் அப்போஸ்தல தீர்க்கதரிசன வல்லமை முகாம் நடைபெற இருக்கிறது. ஊழியத்தில் வாஞ்சை உள்ள மக்கள் மற்றும் ஆழமான சத்தியங்களை அறிய விரும்புகிற அனைவரும் இந்த முகாமில் கலந்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு அதிக பிரயோஜனமாக இருக்கும்.

கூட்டங்களை நடத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் இலட்சக்கணக்கில் நாம் செலவு செய்கிறோம்.


**ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627

Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.

Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

உங்கள் குடும்பத்தின் சார்பாக இந்த கூட்டங்களை பொருத்தனையோடு தாங்குங்கள். இதன் மூலம் சந்திக்கப்படும் ஆத்துமாக்களை கர்த்தர் உங்கள் கணக்கில் எடுத்துக்கொள்வார்.

Ministry of Jesus youtube சேனல் வாயிலாக வெளிவருகிற அனைத்து நிகழ்ச்சிகளையும், புதிய பாடல்களையும் தவறாமல் பார்த்து subscribe செய்யுங்கள். உங்கள் நண்பர்களுக்கு share பண்ணுங்கள்.

எங்களுடைய ஒரே நோக்கம் ஆத்தும ஆதாயம், இந்தியா முழுவதும் கிறிஸ்துவின் அன்பு பரவ வேண்டும். இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள் பலத்த கிரியைகள் நடைபெறவேண்டும். எனவே, எங்களை போல ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் எங்களுக்குத் தெரிவிக்கவும். உங்களுக்கு கற்றுத் தருகிறோம்.


கடந்த மார்ச் மாதம் 15-ம் தேதி எங்கள் அழைப்பை ஏற்று மிகுந்த வாஞ்சையோடு, அன்போடு எங்கள் அப்பாவின் 72-வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு ஜெபித்த உங்கள் ஒவ்வொரு வரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக! கர்த்தர் தாமே உங்களோடு இருப்பாராக! **ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள் – ரோமர் 16:16**

தொடர்ந்து எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காக ஜெபியுங்கள். எங்கள் அனை வருடைய நல்ல சவுக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

***உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பு பண்டிகை வாழ்த்துக்கள்!***

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

jane@mojindia.org




**Malayalam Whats App No. +91 94889 32937**



# கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறோம்!

தேவ செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உயிர்த்தெழுந்த நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் ஜீவனோடு இருக்கிறார் என்பதால் நாம் அனைவரும் நம்பிக்கையோடு சந்தோஷமாக இருக்கிறோம்.

கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் பண்டிகையை ஆசரிக்கும் இந்த மாதத்தில் அவர் ஜீவனோடு இருப்பதால் நமக்கு கிடைக்கும் நன்மைகளை நினைத்து நாம் தியானிக்கப்போகிறோம். ஒருவர் மரித்தோரிடத்திலிருந்து ஜீவனோடு வரும்பொழுது அவரது வாழ்வில் ஏற்படுகிற ஒரு புது சகாப்தம் தான் புது ஆரம்பம் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக ஒரு தாய் தன் பிரசவத்தின்போது அனுபவிக்கிற வேதனைகள் அனைத்தும் மரித்து உயிர் பிழைப்பதுபோல இருக்கும் என சொல்ல கேட்டிருக்கிறோம். ஏதோ ஒரு விபத்தில் சிக்கி மிகுந்த ஆபத்துக்குள்ளான நிலையிலிருந்து ஒருவர் மீண்டு வரும்பொழுது அது அவருக்கு கிடைத்த ஒரு புது வாழ்வு என்கிறோம்.

ஆம். எனக்கன்பானவர்களே, நம் தேவாதி தேவனாகிய இயேசுகிறிஸ்து நாம் புது வாழ்வை பெறும்படி, புது ஜீவனை பெறும்படி சிலுவை மரணத்தை ஜெயித்து இன்றும் ஜீவனோடு இருக்கிறார். **ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள்.** 1கொரி.15:22-ன்படி இயேசு கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள் என்று வசனம் கூறுகின்றது. இது எப்படி சாத்தியமாகும்? என்ன வழிகளில் இந்த உயிர்ப்பு நடக்கும்? என்பதை குறித்து நாம் இன்று பார்க்க போகிறோம்.

## புது வாழ்விற்கு உயிர்ப்பிக்கப்படுகிறோம்

கிறிஸ்து ஜீவனோடு இருப்பதன் நிமித்தம், நாம் மரணத்தால் வெல்லப்படாமல் மரணத்தை ஜெயிக்கிறவர்களாக இருக்கிறோம். முதல் மனிதனாகிய ஆதாம் பாவம் செய்ததினிமித்தம் இவ்வுலகில் மரணம் தோன்றியது. இத்தகைய மனுஷனால் உண்டான மரணத்தை இயேசு சிலுவையில் மரித்து உயிரோடு எழுந்து மேற்கொண்டார். எனவேதான் 1 கொரி.15:22-ல் பவுல் அப்போஸ்தலன், 'ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்து வுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறோம்' என்று கூறுகிறார். ஆதாமுக்குள் நாம் எப்படி பாவத்தில் மரிக்கிறோம்? ஆதாம், ஏவாள் நிமித்தம் இவ்வுலகில் பாவம் நுழைந்தது. ரோமர் 3:23-ன்படி எல்லாரும் பாவம்

செய்து தேவ மகிமையற்றவர்களாக மாறுகிறோம். இந்த பாவம் ரோமர் 6:23-ல் பார்க்கிறபடி மரணத்தை நமக்கு உண்டாக்கியது. இந்த மரணத்தி னின்று யார் நம்மை தப்புவிப்பார்? நம்முடைய ஆத்துமா பாவத்தினால் அழியும்போது திரும்பவும் நம்முடைய ஆத்துமாவை ஜீவனோடு காப்பது எது? கண்டிப்பாக அது முடியுமா? ஆம், முடியும். **இயேசு நம்முடைய பாவங்களை நீக்கி தம்முடைய இரத்தத் தினாலே நம்மை சுத்திகரிக்க வல்லவராயிருக் கிறார். பாவமானது அதிகாரம் பெற்று மரணத்தை நமக்குள் உண்டாக்காதபடி இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்தி கரிக்கின்றது. (ரோமர் 5:14-18)**

எனவே இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் பொழுது அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் நாமும் பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைத்தவர் களாக மாறிவிடுகிறோம். பாவத்தினால் உண்டாகும் விளைவுகள் மாம்சத்திலே இயேசு கிறிஸ்து மூலமாக ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப் பட்டிருக்கிறது. **அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். ரோமர் 8:3,10-ன்படி** இயேசு என்னும் தேவ குமாரனின் இரத்தத்தினால் நாம் கழுவப்படும்போது அவருடைய ஜீவன் நமக்குள் இறங்கி நம்மையும் பாவமற ஜீவனுள்ளதாக மாற்றும்.

இயேசு இந்த உலகத்தில் வந்ததினிமித்தம் மனிதர்களுக்கு ஏற்பட்ட பாவமான வாழ்க்கையி லிருந்து விடுதலைக்கான ஒரு வழி பிறந்தது. **லூக்கா 19:1-10** வசனங்களில் சகேயு என்ற மனிதனைக் குறித்து நாம் பார்க்கின்றோம். அவன் ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமா யிருந்தான். ஆயக்காரர்களின் தலைவன் என்று சொல்லும்பொழுதே அவன் தவறு செய்பவன் என்று அர்த்தம். ஏனென்றால் ஆயக்காரர்கள் அளவுக்கு அதிகமான வரிகளை ஜனங்களிடம் வசூல் செய்து வாழ்பவர்கள். இப்படி ஏமாற்றுகிற வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருந்த சகேயு இயேசுவை காண காட்டத்தி மரத்தின் மேல் ஏறி நிற்கிறான். இயேசு அவனை கண்டப்பொழுது, 'சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கி வா' என அழைக்கிறார். **இயேசு அழைத்தவுடன் தானே சகேயு தன் பாவங்களை ஒத்துக்கொண்டு அறிக்கை செய்கிறான். அந்த வீட்டிற்கு மிகப்பெரிய இரட்சிப்பு உண்டானது. சகேயு ஒரு பாவியாய் ஆயக்காரனாய் இருந்தாலும் அன்று அவன் பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்த வனாய் மாறினான்.**

**யோவான் 8:1-11** வசனங்களில் நாம் பார்க்கிற படி விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பாவியான ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவிடம் கொண்டு வந்தனர். மற்றவர்களைப் போல இயேசுவும் அவளை நியாயந்தீர்த்து கல்லெறிந்து கொன்று விடுவார் என அனைவரும் நினைத்தனர். இயேசுவோ அவளைப் பார்த்து, **"நீ போ, இனி பாவம் செய்யாதே"** என்றார். **அன்று மரிக்க வேண்டிய பாவியான ஸ்திரீக்கு இயேசுவினால் புது வாழ்வு உண்டானது.**

**ஆம் பிரியமானவர்களே, இயேசு உயிர்த் தெழுந்ததின் நோக்கம் இதுதான்.** பாவத்திலே செத்துக்கொண்டிருக்கிற நம்முடைய வாழ்க்கை உயிர்ப்பிக்கப்பட்டு நீதியானதாய், அவருடைய

சாயலாய், ஜீவனுள்ளதாய் மாறுவதே அவர் உயிர்த்தெழுந்த வல்லமையின் செயல் ஆகும்.

## புது உறவுக்கென்று உயிர்ப்பிக்கப்படுகின்றோம்!

பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையே நெருங்கிய உறவு இருக்கவேண்டுமென்று நினைத்தாலும் அது அவனால் கூடாத காரியமாக இருந்தது. ஆனால் இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகோ ஆண்டவரோடு நெருங்கி பழகும் சிலாக்கியம் நம் அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது.

இந்த புதிய உறவு மனிதனால் உண்டானது அல்ல. கிறிஸ்துவே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார். இந்த புது உடன் படிக்கையில் நாம் பங்குள்ளவர்களாக மாறும் பொழுது நமக்கும் தேவனுக்கும் இடையே இருக்கின்ற உறவு புதுப்பிக்கப்படுகிறது. முன்பு தூரமாயிருந்த நாம் **"அப்பா பிதாவே"** என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியை பெற்றவர்களாக மாறுகிறோம். அடிமைகளாக இல்லாமல் புத்திரர்களாக மாறுகிறோம். எனவே நாம் இயேசுவைப் போலவே பிதாவின் அண்டையில் சேறுவதற்குரிய சிலாக்கியம் பெற்றவர் களாகிறோம்.

ஒரு எஜமானுக்கும் ஒரு வேலைக் காரருக்கும் இடையே உள்ள தொடர்புபோல இல்லாமல், கடவுளுக்கும் ஒரு பொருளுக்கும் உள்ள உறவாக அல்லாமல், ஒரு தகப்பனுக்கும், பிள்ளைக்கும் இடையே உள்ள உறவு நிலை நமக்குள் ஏற்படுகின்றது.

**லூக்கா 18-ம்** அதிகாரத்தில் கெட்ட குமாரன் தகப்பனைவிட்டு தூரம் போய் விடுகிறான். அவனுக்கு உணர்வு வந்த பொழுதோ அவன் தன் தகப்பனிடத்தில் திரும்பி வந்து பரத்திற்கும் உமக்கும் விரோதமாய் குற்றம் செய்தேன் என்று சொல்லி ஒப்புரவாகிறான். இந்த ஒப்புரவாகுதலின் நிமித்தம் தகப்பன் அவனைக் குறித்து துக்கம் கொள்ளாமல் களிகூறுகிறதை நாம் பார்க்கிறோம். **ஆம். பிரியமானவர்களே, உங்களைக் குறித்து தேவன் இப்பொழுது களிகூறுகிறார். இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் நிமித்தம் உங்களுக்கும், தேவனுக்கும் இடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி, உங்கள் உறவு புதுப்பிக்கப்பட்டதாய், சகல உரிமையும் பெற்ற இராஜகுமாரனாய் நீங்கள் மாறுகிறீர்கள். ... அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்ளுவதற்காக, புது உடன் படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். (எபிரெயர் 9:15)**

ஒரு முறை இயேசு தன் சீஷர்களைப் பார்த்து நான் யாரென்று நீங்கள் நினைக்கிறீர்கள் என கேட்டார். அதற்கு பேதுரு, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தான். இயேசுவின் சிலுவை மரணத்தின்போது, பேதுரு இயேசுவை யாரென எனக்கு தெரியாது என்று மறுதலித்தான். அதற்கு பிறகு மனங்கசந்து அழுதான். இயேசு உயிர்த்தெழுந்தப்பிறகு என்ன நடந்தது என்பதை **யோவான் 21-ம்** அதிகாரத்தில் நாம் தெளிவாக அறிவோம். உயிர்த்தெழுந்த இயேசு தம்முடைய சீஷர்களுக்கு காட்சியளிக்கின்றார். உயிர்த்த இயேசுவை சீஷர்கள் காண்கிறார்கள். மீன் பிடிக்க போயிருந்த இடத்தில் இயேசுவை பார்த்தவுடன் அவர்களுக்கு ஆச்சரியமாகவும் பயமாகவும் இருந்தது. இயேசுவோ அவர்களைப் பார்த்து **'பிள்ளைகளே'** என அழைக்கிறார். அது மாத்திரமல்லாமல் பேதுருவைப் பார்த்து, **"சீமோனே,**

இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பு கூறுகிறாயா" என மூன்று முறை கேட்டார். அதன்பின் மிகப்பெரிய பொறுப்பை கொடுத்து "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என சொல்லி செல்கின்றார். இதுதான் உயிர்த்தெழுதலின் மேன்மை. பழைய உறவு, பழைய பாவங்கள் மறக்கப்பட்டு, புதிய உறவு ஏற்படுத்தப்படுகின்றது. இவ்வாறு நமக்கும் ஆண்டவருக்கும் இடையேயான நெருக்கம் அதிகமாகி அவர் நம்மை உயர்த்தி உன்னதங்களில் வைக்கின்றார்.

## புது வல்லமைக்கென்று உயிர்ப்பிக்கப்படுகிறோம்!

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பினிமித்தம் நம் அனைவருக்கும் மரணத்தின் மீது அதிகாரமும், புது வாழ்வும் கிடைக்கிறது. அதுமாத்திரமல்ல, நம் மாம்சத்திலே ஜீவனோடு இருக்கும் நேரத்திலும் மரணத்தையும் சத்துருவின் போராட்டங்களையும் எல்லாவிதமான தீமைகளையும் மேற்கொள்ள புது வல்லமையினால் தரிப்பிக்கப்படுகிறோம். 1கொரி.15:17-ல் பார்க்கிறபடி கிறிஸ்து எழுந்திரா விட்டால் நம் விசுவாசம் வீணாகியிருக்கும்.

ஆம் பிரியமானவர்களே, மரித்துப்போன ஒரு மகானுடைய பெயர் அல்லது ஒரு மனித னுடைய சிபாரிசை வைத்து நாம் பிழைக்கவில்லை. மரித்து உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவனோடு இருக்கிற தேவாதி தேவனுடைய வல்லமையினால் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். ...கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோமர் 8:11-ல் நாம் பார்க்கிறபடி இது எப்படி சாத்தியமாகும் என நீங்கள் கேட்கலாம். முதலாம் மரணம் நேரிடும்போதோ, அவருடைய வருகையின் போதோ நாம் பரலோகத் திற்கு எடுத்து கொள்ளப்பட்டால் நம்முடைய ஆத்துமா நித்திய ஜீவனுக்கென்று மறுரூபப்படுகிறது. அதுமாத்திர மல்லாமல் நியாயத்தீர்ப்பின் போது அவர் நம்முடைய சரீரங்களையும் மகிமையானதாக உயிர்ப்பிக்கின்றார். (1கொரி.15:35-54)

ஆவிக்குரிய பிரகாரமாக சகல அழிக்கும் சாத்தானின் கிரியைகளையும் பிசாசின் சகல வஞ்சனைகளையும் மேற்கொள்ளத்தக்கதான வல்லமையை நாம் பெற்றுக்கொள்கிறோம். **எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர் மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவை களாயிருக்கிறது.** (2கொரி.10:4) **நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, ஏனெனில், மாம்சத் தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங் களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.** (எபேசியர் 6:11-12)

இந்த புதிய வல்லமையானது நமக்குள் ஊற்றப்படும்பொழுது நாம் மரணத்தை கண்டும் பிசாசைக்கண்டும் எந்த போராட்டத்தைக் கண்டும் அஞ்ச வேண்டியதில்லை. கிறிஸ்துவுக்குள் நாம் வெற்றி சிறக்கிறவர்களாக இருக்கிறோம். ரோமர் 8:37. இதை அப்போஸ்தலர்களுடைய வாழ்க்கையில் நாம் கண்கூடாக பார்க்கமுடிகிறது. பயந்துப்போய் கிறிஸ்துவின் கல்லறைக்கு கூட செல்ல துணிச்சல் இல்லாத சீஷர்கள், ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள் என்று

தைரியமாக சொல்லுமளவிற்கு வல்லமையினால் நிரப்பப்பட்டார்கள். பேதுருவின் நிழல்பட்ட மாத்திரத்தில் அநேகர் சொஸ்தமாக்கப்பட்டார்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரம்பிய அப்போஸ்தலர்கள் யூதேயா, சமாரியா மாத்திர மல்ல, உலகமெங்கும் சென்று இயேசுவின் சாட்சிகளாய், உலகமெங்கும் இயேசுவின் பெயரை சொல்லுபவர்களாய் மாறினார்கள்.

ஆம். எனக்கன்பானவர்களே, **நாமும் கூட உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசிக்கும்பொழுது வல்லமையினால் இடைகட்டப்படுகிறோம். உன்னதத்தின் வல்லமை நம்மை நிறைக்கின்றது. சகலவிதங்களிலும் இயேசுவைப் போல ஒருவராலும் மேற்கொள்ளப்பட முடியாத ஆவியானவரின் வல்லமை நம்மை ஆட்கொள்ளுகிறது. ...என்னை விசுவாசிக் கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியை களையும் செய்வான். யோவான் 14:12-ல்** இயேசு சொன்னது போல அவரை விசுவாசிக்கிற நாமும் பெரிய காரியங்களை செய்வோம்.

**இன்றைக்கு உங்கள் நிலைமை என்ன? ஏதோ சிலுவையைக் குறித்து தியானித்தோம், இயேசுவைப் பற்றி பேசினோம், என் வாழ்வில் எந்த மாற்றமுமில்லை, பிறர் வாழ்விலும் மாற்றமில்லை என்று நினைத்து கொண்டிருக்கிறீர்களா? இன்றே இயேசுவின் வல்லமை உங்களை இடைகட்டும், உங்கள் வாழ்க்கையை மாற்றும். உங்கள் மூலமாக அநேகருடைய வாழ்க்கை யில் இருக்கிற கட்டுகள் அறுக்கப்படும்.**

1938-ம் ஆண்டு போர்டோ ரிக்கோ (Pueorto Rico) என்ற தேசத்தில் சூனியம் செய்யும் பெண்ணுக்கும், சாத்தானுக்கு சேவை செய்யும் மனிதராக இருந்த ஒரு நபருக்கும் திருமணம் ஆகி 19 பிள்ளைகள் இருந்தார்கள். இவர்களுக்கு பிறந்த பிள்ளைகளில் ஒரு மகனுடைய பெயர் நிக்கி குரூஸ். அவன் பெற்றோர் அவனை சாத்தானின் மகன் என்றே அழைத்தனர். இந்த பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மிகவும் கொடூரமாக நடத்தினார்கள். இதனால் இந்த நிக்கி குரூஸ் தன் குடும்பத்தை விட்டு அமெரிக்கா தேசத்திற்கு தன்னுடைய 16-வது வயதில் சென்று விட்டார். அங்கு மாவ் மாவ் (Mau Mau) என்ற கொடூரமான கும்பலுடன் சேர்ந்து அநேக கொலை, கொள்ளை குற்றங்களை செய்து வந்தான். இதனால் போலீஸ் அடிக்கடி இவனை கைது செய்து கொண்டு செல்லும். அந்த ஊரில் பார்க்கிற அனைவரும் இவனை கண்டு நடுங்கும் அளவிற்கு மாறி விட்டான்.

அந்த ஊரில் டேவிட் வில்கர்சன் (David Wilkerson) என்ற ஊழியர் தன் மனைவியுடன் இணைந்து ஊழியம் செய்து வந்தார். அவர் நிக்கி குரூஸ் மற்றும் உடனிருந்த அந்த வாலிபர்களைப் பார்த்து தன்னுடைய ஜெபகூட்டத்திற்கு வரும்படி அழைத்தார். அவர்கள் அந்த கூட்டத்திற்கு வந்து ஊழியரின் முகத்தில் துப்பி, சண்டையிட்டு சென்று விடுவார்கள். ஆனாலும் ஊழியர் சோர்ந்து போகவில்லை. இப்படியாக பல நாட்கள் கடந்தது. ஒரு நாள் நிக்கி குரூஸ் அவருடைய கூட்டத்திற்கு கலாட்டா பண்ண வந்திருந்தான். ஊழியரின் நெஞ்சில் கத்தியை வைத்து மிரட்டி, 'இயேசுவைப் பற்றி சொன்னால் கொன்று விடுவேன்' என மிரட்டினான். அப்பொழுது அந்த ஊழியர், நிக்கி குரூஸ்-ஐப் பார்த்து, **'நீ என்னை வெட்டி ஆயிரம் துண்டுகளாக போடலாம். ஆனாலும் அந்த ஒவ்வொரு துண்டும் இயேசு உன்னை நேசிக்கிறார் என்று சொல்லும். இது நிச்சயம்' என்றார். இந்த வார்த்தை நிக்கி குரூஸ்-ன் மனதில் மாற்றத்தை கொண்டு வந்தது. அவர் சொன்ன ஒவ்வொரு**

**வார்த்தைகளும் அவன் இருதயத்தை பிளந்தது. அன்றைய நாள் பிரசங்கத்தில் 2கொரி.5:17-ஐ சொல்லி நீ புதிய மனுஷனாக மாறப்போகிறாய் என்றார்.**

நிக்கி குரூஸின் கல்லான இருதயம் உடைந்தது. அவன் தனக்குள் "இந்த பட்டணத்திலே நான் மிகவும் மோசமான போக்கிரியாக வாழ்ந்து வருகிறேன். ஆகவே இயேசுவுக்கு நான் தேவையில்லை. அப்படி தேவையென்றால் அவர் என்னை வைத்துக் கொள்ளட்டும். அவ்வாறு நடந்தால் இத்தனை நாட்களாக நான் எப்படி கொலைகாரனாக சுற்றி திரிந்தேனோ, அதேப்போல இயேசுவிற்காக இனி சுற்றி வருவேன்" என்று ஜெபித்தான். அந்த நொடிப் பொழுதில் நிக்கி குரூஸ்-ன் இருதயத்தில் மாற்றம் வந்தது. மிகவும் கொடூரமான அந்த மனிதன் சிறு பிள்ளையைப் போல தன் தவறுகளை நினைத்து அழ ஆரம்பித்தான். இத்தனை வருடங்களாக இல்லாத மிகப்பெரிய மெய்யான சமாதானம் அவன் இருதயத்தை நிரப்பியது.

அதன்பின் தன் உடனிருந்த வாலிபர்களை அழைத்துக்கொண்டு, அவர்கள் பயன்படுத்தின இரும்பு ஆயுதங்கள், துப்பாக்கிகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு போலீஸிடம் சென்று ஒப்படைத்து விட்டு சரணடைந்தான்.

சில நாட்களில் விடுதலையாகி வந்தவுடன் தேவனுடைய ஊழியக்காரனாய் மாறி உலகமெங்கும் சென்று இயேசுவை குறித்து பிரசங்கித்து வந்தான். அவன் பிரசங்கத்தை கேட்ட அநேகருடைய வாழ்க்கையை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மாற்றியது. இவருடைய வாழ்க்கை Run Baby Run மற்றும் The Cross and the Switch blade என்று சொல்லப்பட்ட புத்தகங்களாகவும், வாழ்க்கை சரிதை படமாகவும் வெளிவந்தது. இன்றும் அவர் ஆண்டவருக்காக வல்லமையாய் ஊழியம் செய்து வருகிறார்.

ஆம் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தது போலவே நம்முடைய வாழ்க்கையிலும் அவர் நம்மை உயிர்த்தெழ செய்ய முடியும். நம்முடைய கஷ்டங்கள், பிரச்சினைகளை கண்டும் காணாதவர் போல அவர் ஒரு நாளும் இருக்க மாட்டார். உங்கள் வாழ்க்கையும் அவர் வல்லமையினால் மாற்றம் பெறும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை உங்களுக்குள், உங்கள் மூலமாக வல்லமையாக வெளிப்படும்.


**அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்**

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
NAMBIKKAI TELEVISION
வெள்ளி. சனி. ஞாயிறு
8:30PM to 9:00PM

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
ARADHANA TV
வியாழன். வெள்ளி
7:00PM to 7:30PM

# அப்போஸ்தல தீர்க்கதரிசன வல்லமை முகாம்

# Apostolic & Prophetic Power Training



**ஏப்ரல் 28,29,30**
**(திங்கள், செவ்வாய், புதன்)**

**காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை**

**இடம் : Blessing Church, மாதவபுரம், கன்னியாகுமரி.**

**பயிற்சி : Dr. ஆனந்த ஸ்திரா**

## கற்பிக்கப்படும் பாடங்கள்

- தேவனோடு உறவாடுதல், ஆவியின் கனிகள், ஒன்பது வரங்கள்
- வேதத்தை புரிந்துகொள்வது, தியானிப்பது, பிரசங்கிப்பது
- அந்தகார வல்லமைகளை எப்படி மேற்கொள்வது!
- திரியேக தேவனின் மகிமை, மாட்சிமை, குணாதிசயங்கள்
- பரலோகம், நரகம், பாதாளம், உலக முடிவு, நியாயத்தீர்ப்பு, நித்தியம்

## பயன்கள் – பலன்கள்

- ஜெப வாழ்வில் மாற்றம்
- மறுரூபப்பட்ட அனுபவம்

## சிறப்பம்சம்

தெளிவான வேத விளக்கங்கள்
அனுபவங்களோடு

**காணிக்கை : ரூ.1,000/- அதற்குமேல் ஊழிய காணிக்கை உங்கள் விருப்பம்போல்**

## தொடர்புக்கு

அன்பரின் ஊழியம் – 94888 45627

Dr.Mrs. ஷீலா தர்மராஜ், Cell: 9442138245 / Bro.ஜெரால்ட், Cell: 8220317472

வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு தங்கும் வசதி செய்து தரப்படும்.
தொடர்புக்கு: Dr. தர்மராஜ், Cell: 9442555836


We Are Hiring!!
PRAYER WARRIORS
Language Known
Tamil-Malayalam
Tamil- Telugu
ministryofjesushr@gmail.com
Male / Female || Christians Preferred


நாள் : ஏப்ரல்
14
திங்கள்கிழமை
நாங்குனேரியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
இடம் :கிரேஸ் ஏ.ஜி. சர்ச்,பாணான்குளம்,
நாகர்கோவில் மெயின் ரோடு, காவல்நிலையம் பின்புறம்.
நாங்குனேரி, திருநெல்வேலிமாவட்டம்
தேவசெய்தி : Dr. ஆனந்த ஸ்திரா
(அன்பரின் ஊழியம், திருச்சி)
கூட்டமுடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்
தொடர்புக்கு : 94888 45627 & 0431-2741922


விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை
ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி
அபிஷேகம் நிறைந்த பாடல்கள், அனல் மூட்டும் தேவ செய்தி.
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்
ஜாதி. மத. இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக
இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.
டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

# வங்கிக் கணக்குகளின் விபரம்

**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**



**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்

"இந்த
QR code-ஐ உங்கள்
செல்போனில் ஸ்கேன் செய்து
அல்லது
95004 87061 என்ற எண்
மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும்
செயலிகள்
மூலமாகவும் காணிக்கை
அனுப்பலாம்."



மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website) || Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 620018.

## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் - மார்த்தாண்டம், அஞ்சுகிராமம், சென்னை















**ஜெப வேளையில் கண்ணீருடன் கதறும் மக்கள்**

## அட்வென்ட் கிறிஸ்தவ முதல் திருச்சபையில் நடைபெற்ற பெண்கள் சிறப்பு ஆராதனை






## Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்த நாள்






# துதி அறிக்கை

## தடை நீங்கி புது வீடு கட்டினோம்!



எங்கள் சொந்த இடத்தில் வீடுகட்ட முடியாமல் உறவினர்களால் 4 வருடமாக கஷ்டங்களை அனுபவித்தோம். மாட்டுக்கொட்டில் அருகில் வாழ்ந்துக் கொண்டு இருந்தோம். கடந்த வருடம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்து ஜெப விண்ணப்பத்தில் இந்த பிரச்சனை நீங்கி, வீடு கட்டவேண்டும் என எழுதிக் கொடுத்து சென்றேன். கர்த்தர் அற்புதமாக இரங்கினார். இரண்டு அறைகளுடன் கூடிய புது வீட்டை கட்டி முடிப்பதற்கு கர்த்தர் ஒத்தாசை செய்தார். தடையை நீக்கி காரியத்தை வாய்க்கச் செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

– திருமதி. டெய்சி ராணி.

## மருத்துவபடிப்பிற்கான இடம் அற்புதமாக கிடைத்தது!

கடந்த ஜனவரி மாதம் தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் நாங்கள் குடும்பமாக கலந்துக் கொண்டோம். தனி ஜெபத்தில் எங்கள் பேரன் Dr. ஜேசனுடைய மருத்துவபடிப்பிற்கான இடம் கிடைக்க ஜெபிக்கும்படி Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் கேட்டுக்கொண்டோம். ஐயா அவர்களும் பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே கிருபையாக இரங்கினார். தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியிலேயே M.D. படிப்பதற்கான இடம் கிடைத்தது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



– திரு. ஜெயசந்திரன், தூத்துக்குடி.

## குழந்தை பிறந்தது!

எனக்கு 2010–ம் ஆண்டில் திருமணம் ஆகி ஒரு பெண் குழந்தை இருக்கிறது. நாங்கள் 2–வது குழந்தைக்காக ஆசைப்பட்டோம். ஆனால் 5 வருடங்களாக குழந்தை உண்டாகவில்லை. 2017–ம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். Mrs.மார்கிரேட் ஸ்திரா அம்மா அவர்கள் எனக்காக ஊக்கமாய் ஜெபித்து அனுப்பினார்கள். அந்த ஆண்டிலேயே நான் கருத்தரித்து ஆண் குழந்தை பெற்றெடுக்க கர்த்தர் உதவி செய்தார். கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

## கட்டி மறைந்தது!



கடந்த இரண்டு வருடங்களாக என்னுடைய கை விரல்களில் தொடர்ந்து கட்டி வந்துக் கொண்டே இருந்தது. அதற்காக சிகிச்சை எடுத்து, மாத்திரை சாப்பிடும் பொழுது வலி இருக்காது. மாத்திரையை நிறுத்தியவுடன் வலி அதிகமாக இருக்கும். திருச்சி கூட்டத்திற்கு வந்திருந்தப் பொழுது ஜெப எண்ணெயை வாங்கி, அதை ஜெபித்து தடவினேன். இது நாள் வரை கட்டி எதுவும் வரவில்லை. பரிபூரண சுகத்துடன் இருக்கிறேன். தேவனுக்கே மகிமை!

– திருமதி. சுஜாதா, லால்குடி.

## நீர் கட்டி மறைந்தது! குழந்தை பிறந்தது!



எனக்கு திருமணமாகி குழந்தை இல்லாமல் கஷ்டப்பட்டேன். அதற்காக மருத்துவமனைக்கு சென்றப் பொழுது எனக்கு நீர் கட்டி இருக்கிறது என சொல்லி இரண்டு மாதங்கள் மாத்திரை சாப்பிடச் சொன்னார்கள். இரண்டு மாதங்கள் கழித்து சென்ற பொழுது கட்டி பெரிதாக இருக்கிறது லேப்ராஸ்கோப் மூலம் ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என சொல்லிவிட்டார்கள். அதன்பின் நான் எந்த சிகிச்சைக்கும் செல்லவில்லை.

2022–ம் வருடம் அக்டோபர் மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் கலந்துக் கொண்டேன். தனி ஜெபத்தில் **Mrs. மார்கிரேட் ஸ்திரா** அம்மாவிடம் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். அம்மா பாரத்துடன் ஜெபித்துவிட்டு "இயேசுவை நம்பு அற்புதம் செய்வார்" என சொல்லி அனுப்பினார்கள். அந்த வருடம் டிசம்பர் மாதத்திலேயே நான் கருத்தரித்தேன். கர்த்தர் தாமே எனக்கு அழகான பெண் குழந்தையை தந்து அற்புதம் செய்துள்ளார்.

அத்துடன் இந்த நீர் கட்டியினால் கடந்த 9 வருடங்களாக இரத்தபோக்கு பிரச்சனையினால் கஷ்டப்பட்டேன். அந்த பிரச்சனையும் நீங்கி தற்பொழுது நல்ல சுகத்துடன் இருக்க கர்த்தர் தயை செய்தார். கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

– திருமதி. யோகனா, அரியலூர்.

## தேர்வில் வெற்றி! வலிப்பு நோய் நீங்கியது!

எங்களுடைய 2–வது மகள் M.B.B.S. படித்துக் கொண்டிருந்தப் பொழுது தேர்வு நாட்களில் அதிக பயத்துடன் இருந்தாள். அப்பொழுது **Dr. ஜேன் ஜாஷ்வா** அவர்கள் மகளுடன் பேசி மகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்கள். அதன்பின் மகளுடைய பயம் நீங்கி நன்றாக படிக்க ஆரம்பித்தாள். M.B.B.S. தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்து மகள் வெற்றி பெற்றிருக்கிறாள். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.



என்னுடைய பெரிய மகள் BDS படித்துக் கொண்டிருந்தப்பொழுது வலிப்பு நோய் வந்தது. அதற்காக Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா ஜெபித்துவிட்டு இனி இந்த நோய் வரவே வராது என ஜெபித்து அனுப்பினார்கள். அவர்கள் கூறிய வார்த்தையின் படியே இதுவரை அந்த வலிப்பு நோய் வரவேயில்லை. பரிபூரண சுகத்துடன் மகள் இருக்கிறாள். அதற்காக கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

என்னுடைய இரண்டு மகள்களும் மருத்துவ படிப்பை நல்ல முறையில் முடிப்பதற்கு கர்த்தர் உதவி செய்தார். அதற்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

– திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை.

## அற்புத சுகம் பெற்றேன்! வீடு கட்டினோம்!



எனது இடுப்பு பகுதியில் ஆப்ரேஷன் செய்திருந்த காரணத்தினால் மற்றும் சரீரத்தில் உள்ள பல பிரச்சனைகளினால் மருந்துகளை உட்கொண்டு வந்தேன். இடுப்பில் பெலட் அணிய வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன். கடந்த கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது Dr.ஆனந்த ஸ்திரா ஐயா எனக்காக ஜெபித்து அனுப்பினார்கள். Dr.ஜேன் ஜாஷ்வா அவர்களும் இனி பெல்ட் அணிய தேவையிருக்காது நல்ல சுகம் உண்டாகும் என சொல்லி அனுப்பினார்கள். கர்த்தர் தாமே அவர்கள் இருவருடைய தீர்க்கதரிசன வார்த்தையின்படியே மாத்திரை உட்கொள்ளாமல் நல்ல சுகத்துடன் இருக்கவும், இடுப்பில் பெல்ட் இல்லாமல் நல்ல பெலத்துடன் இருக்கவும் கர்த்தர் இரங்கினார்.

நாங்கள் வீடு கட்டுவதில் அதிக பிரச்சனைகள் இருந்தது. Mrs. மார்கிரேட் ஸ்திரா அம்மாவிடம் அதற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தாவே, "என் மகளுடைய வீட்டு பிரச்சனை இன்றே முடிவிற்கு வர உதவிசெய்யும்" என அம்மா ஜெபித்து அனுப்பினார்கள். அவர்கள் ஜெபத்தின்படி கர்த்தர் எனக்கு அந்த நாளிலேயே அற்புதம் செய்தார். ஜெபம் முடிந்து வீட்டிற்கு சென்றேன். என் கணவர் வீட்டு வேலை செய்வதற்கான ஆட்களை வைத்து வேலையை ஆரம்பித்திருந்தார். இந்த அற்புதங்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். ஐயா குடும்பத்தினருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– திருமதி. லூர்துமேரி, பெரம்பலூர்.

## ஊரல் நோய் நீங்கியது!

நான் அரசு துறையில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 5 வருடங்களாக ஊரல் நோயினால் நான் அதிகமாக கஷ்டப்பட்டேன். இரவில் தூங்கமுடியாது. உடல் முழுவதும் தடிப்பு தடிப்பாக இருக்கும். குச்சி வைத்து உடல் முழுவதும் சொறிந்துக்கொண்டே இருப்பேன். தென்காசியில்

நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்துவிட்டு ஜெப எண்ணெயை தடவும்படி சொல்லி அனுப்பி னார்கள். நானும் தடவினேன். அந்த நாளிலிருந்து ஊரல் நின்றுவிட்டது. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். அற்புத சுகத்தை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கி றேன். எனக்காக ஜெபித்த ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

## மருத்துவரால் கைவிடப்பட்ட நோய், இயேசுவின் தழும்புகளால் சுகமானது!

எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள ஒரு சகோதரனுக்கு சிறுநீர் உறுப்பில் கட்டிகளும், புண்களும் வந்து பல மாதங்களாக கஷ்டப் பட்டார். அதற்காக தஞ்சாவூர் மற்றும் கும்ப கோணத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டார். எந்த பலனும் இல்லை. மேலும் மேலும் கட்டிகள் வந்தது, புண்கள் அழுகி அந்த இடமே நைந்தப் போன நிலையில் இருந்தது. கடைசியாக அந்த சகோதரரிடம் இயேசுவைப் பற்றி சொல்லி திருச்சி குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு அழைத்து வந்தேன்.



**Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் மிகுந்த பாரத்துடன் அந்த சகோதரனுக்காக ஜெபித்து அனுப்பினார்கள். ஜெபம் முடிந்து நாங்கள் ரயிலில் பயணம் செய்துக் கொண்டிருந்தப் பொழுதே அந்த சகோதரனுக்கு இருந்த கட்டிகள் உடைந்து இரத்தம் கொட்டியது. வீட்டிற்கு சென்று ஒரு சில நாட்களில் முழுவதுமாக புண்கள் ஆறி இப்பொழுது எந்த பிரச்சனையும் இல்லாமல் பரிபூரண சுகத்துடன் இருக்கிறார்கள். அற்புத சுகம் தந்த தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்து வருகிற ஐயா மற்றும் குடும்பத்தினருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**– திருமதி. தர்மவல்லி, கும்பகோணம்.**


## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org
www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

# பங்காளர்களுக்கான விசேஷித்த ஜெபம்!

- பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.
- அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,
- தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;
- ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார் - மத்தேயு 9: 35-38

***கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான அன்பரின் ஊழியப் பங்காளர்களே! ஜெப வீரர்களே! மிகுந்த தாராள மனதுடன் ஊழியத்தை தாங்கி வருகிற அன்பு தேவ பிள்ளைகளே! உதவி செய்பவர்களே! கர்த்தருடைய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்!***

அன்பரின் ஊழியமானது முழுவதும் விசுவாசத்திலேயே ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய கிருபையால் இயங்கி வருகிறது. ஊழியத்தை உற்சாகமாய் தாங்கி வருகிற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், சுயதொழில் செய்பவர்கள், வழக்கறிஞர்கள், தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றுபவர்கள், மருத்துவர்கள், இன்ஜினியர்கள், ஓய்வுபெற்ற பெரியவர்கள் மற்றும் வாலிப பிள்ளைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

அத்துடன் சாதாரண எளிய நிலையில் உள்ள மக்களும் ஊழியத்தை நேசித்து தாங்கி வருகிறார்கள். அவர்கள் யாரென்றால், காய்கறி விற்பவர்கள், பெட்டிக்கடை வைத்திருப்பவர்கள், கூலி வேலை செய்பவர்கள். 100 நாள் வேலைக்கு செல்பவர்கள், சுய தொழில் செய்பவர்கள், துணி விற்பவர்கள், பூ விற்பவர்கள் மற்றும் குறைந்த வருமானத்தை பெறுகிற சகோதர, சகோதரிகள் தாங்கி வருகிறார்கள். இவர்களுக்காகவும் கர்த்தரை துதிப்போம்.

இவ்வாறு ஆவியில் எளிமை உள்ளவர்களால் தான் அன்பரின் ஊழியம் தாங்கப்படுகிறது. ஊழியத்திற்கு வருகின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் அரசு சட்ட திட்டங்களின்படி கண்ணும் கருத்துமாக ஊழியத்திற்கே செலவு செய்கிறோம். எனவே அன்பரின் ஊழிய ஸ்தாபகர் குடும்பமும், அதில் வேலை செய்பவர்களும் பங்காளர்களாகிய உங்களுக்காக உருக்கமாக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.

# ஜெபம்

அன்பின் கர்த்தாவே! உம்மை நாங்கள் ஸ்தோத்தரிக்கிறோம். வாழ்த்துகிறோம். அப்பா பிதாவே! உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ஒப்பற்ற அன்பிற்காக, அவர் எங்களுக்காக சிலுவையில் சிந்தின இரத்தத்திற்காக, மரித்து, உயிர்த்தெழும்பினதற்காக உமக்கு நன்றி சொல்கிறோம், உம்மை போற்றுகிறோம்.

தேவனே! இம்மானுவேலே, நித்திய பிதாவே! வல்லமையுள்ள கர்த்தாவே! இந்த ஊழியத்தைத் தாங்குகிற ஒவ்வொரு மக்கள் மீதும் உமது அளவற்ற கருணையை, இரக்கத்தை காண்பிப்பீராக. அவர்கள் எங்களை அறிவார்கள். அவர்கள் உமக்காகவும், உம்முடைய ஊழியத்திற்காகவும் கொடுக்கிறார்கள். சர்வ வல்லமையுள்ள தேவனாகிய நீர் அவர்கள் கண்ணீரை கண்டு எல்லா இக்கட்டுனின்றும் அவர்களை விடுவித்து, கடன் பாரங்களை எல்லாம் அகற்றி, தேவைகளை சம்பூரணமாய் சந்தியும். தீராத வியாதிகள் அவர்கள் எல்லைகளை விட்டு நீங்கும்படி செய்யும். பங்காளர்களின் குடும்பங்களையும், பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் ஆயிரம் மடங்கு ஆவிக்குரிய வாழ்க்கையிலும், உலகப் பிரகாரமான வாழ்க்கையிலும் ஆசீர்வதிப்பீராக. எல்லா பிசாசின் தந்திரங்களில் இருந்தும், போராட்டங்களில் இருந்தும் அவர்களை விடுவித்தருளும். அவர்கள் உமக்குள் நன்றாக இருக்க வேண்டும். உம்முடைய ஒப்பற்ற அன்பு அவர்களுக்கு கிடைக்கட்டும்.

எங்கள் கண்ணீரின் ஜெபத்தை கேட்டு பலத்த அற்புதங்களை அவர்கள் வாழ்வில் செய்யும். அவர்களுடைய உதவியோடு, ஜெபத்தோடு நாங்கள் நடத்துகிற கூட்டங்களில் இன்னும் வல்லமையான காரியங்களை செய்வீராக. மரித்தோர் எழும்பட்டும்! குருடர்கள் பார்வையடையட்டும்! செவிடர்கள் கேட்கும்படி செய்யும். படுத்த படுக்கையில உள்ளவர்கள் எழும்பி நடக்கட்டும். வறியவர்கள் ஐசுவரியத்தை அடையட்டும். வேலை இல்லாதவர்களுக்கு வேலையை தாரும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தையை தாரும். ஆவிக்குரிய வாழ்வில் பின்மாற்றம் அடைந்தவர்களை உம்மண்டே அழைத்துக் கொள்ளும். அவர்களுக்கு விரோதமாக உருவாக்கப்படுகிற எந்த ஆயுதமும் வாய்க்காமல் போகும்படி செய்யும். கண்மணியை போல அவர்களை காத்தருளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பரம பிதாவே!

(2 கொரி.8: 1-5; 9:7-15; சங்கீதம் 28:6-9; லூக்.8:3; மத். 10:40-42; நீதி. 11:25; மத் 6:33; ஆதி. 14:18-20; சங்.16:3; 2நாளா 31: 5-11; ஏசாயா 58:7-11; நீதி. 19:17; உபா. 28:1-14)




# S.J.SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். ஏசாயா 58:10



சேலம் மாவட்டத்தில் உள்ள பெருமாபாளையம், அம்மன் நகர், அள்ளிக்குட்டை, மாட்டு ஆஸ்பத்திரி, மைக்ரோ காலனி ஆகிய கிராமங்களில் உள்ள பிள்ளைகள் 200 பேர் நமது டியூஷன் சென்டரில் படித்து வருகின்றனர்.

கடந்த பிப்ரவரி மாதம் **Dr.** ஆனந்த ஸ்திரா அவர்கள் பிள்ளைகளை நேரில் சந்தித்து, அவர்கள் கஷ்டங்களை கேட்டறிந்து, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். அத்துடன் நல்வாழ்விற்கு தேவையான நல்லொழுக்கங்களையும் கற்றுக்கொடுத்தார்கள்.

200 பிள்ளைகளுக்கு தேர்விற்கு தேவையான பேனா, பென்சில், ஸ்கேல், பரீட்சை அட்டை, குடை ஆகியவை S. J. SAVES TRUST மூலமாக வழங்கப்பட்டது. அன்றாட தேவைக்குரிய சோப்பு, சீப்பு, எண்ணெய், பேஸ்ட், பிரஸ், சத்துமாவு மற்றும் மருந்து பொருட்களும் கொடுக்கப்பட்டது.









இறுதியில் பிள்ளைகளுக்கு மதிய உணவாக பிரியாணி, இனிப்பு, கார வகைகள் கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டார்கள்.





நமது டியுஷன் சென்டரில் படிக்கிற பிள்ளைகள் பள்ளியில் நடந்த விளையாட்டு போட்டியில் கலந்துக்கொண்டனர். வெற்றி பெற்ற பிள்ளைகள் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்று வந்தனர். அவற்றை பார்த்த ஐயா மிகவும் மகிழ்ந்து, பிள்ளைகளை பாராட்டி வாழ்த்தினார்கள்.

இந்த பணிக்கு உதவி செய்கிற உங்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! தொடர்ந்து இந்த பணிகள் வளர ஜெபியுங்கள், உற்சாகமாய் தாங்குங்கள்.

**S.J. டியூஷன் சென்டரில் படிக்கிற பிள்ளைகள் விளையாட்டு போட்டியில் பெற்ற பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள்**











## S.J.SAVES TRUST
**account details**

**SJ SAVES TRUST**

**A/C NO.019150310875369**

**Tamilnadu Mercantile Bank**

**Palakarai, Trichy.**

**IFSC Code : TMBL0000019**

# உலக செய்திகள்



விண்வெளியில் உள்ள ஐ.எஸ்.எஸ். எனப்படும் சர்வதேச விண்வெளி மையத்தில் ஒன்பது மாதங்களாக இருந்த சுனிதா வில்லியம்ஸ் (59) மற்றும் புட்ச் வில்மோர் (62) மார்ச் 19ம் தேதி அதிகாலை பூமிக்கு திரும்பினர். அவர்களை சுமந்துள்ள ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் "டிராகன்" விண்கலம் இந்திய நேரப்படி மார்ச் 19ம் தேதி அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா அருகே பத்திரமாக கடலில் தரை இறக்கியது. மீட்புப் படையினர் அவர்களை பத்திரமாக மீட்டனர்.

அவர்களின் விண்வெளி பயணம் வெற்றிகரமாக முடிந்து பூமிக்கு திரும்பி உள்ளதை உலகமே கொண்டாடி வருகிறது. இந்நிலையில் 9 மாதங்கள் கழித்து பூமியில் கால் வைத்துள்ள சுனிதா அடுத்தக்கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பது பற்றிய சுவாரசியமான தகவல்கள் வெளியாகி உள்ளன. முதல் கட்டமாக, அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் முழுமையாக நடத்தப்படும். விண்வெளியில் இருந்து திரும்பியவர்களுக்கு பூமியில் நிமிர்ந்து நிற்கும்போது தலைசுற்றல், மயக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளதே அதற்கு காரணம்.




இந்த பயணத்தின் முக்கியத்துவம், இந்த பயணம் வெற்றிகரமாக முடிந்ததால், எதிர்காலத்தில் மனிதர்கள் நிலவு மற்றும் செவ்வாய்க்கு பயணிக்க செய்யும் முயற்சிக்கு இது ஒரு நல்ல முன்னோடியாக இருக்கும். மேலும், மனிதர்களின் நீண்ட கால விண்வெளி வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய முக்கியமான தகவல்களும் இந்த மிஷனின் மூலம் கிடைத்துள்ளது.

## அன்பரின் ஊழியத்திற்காக ஜெபிக்கும் விசேஷித்த பெண்கள் ஜெப கூடுகை

வாரத்தின் எல்லா செவ்வாய் கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது.



**தலைமை: Mrs. மார்கிரேட் ஸ்திரா**

- அன்பரின் ஊழியத்தின் வாயிலாக கர்த்தர் செய்கிற அதிசயங்கள் ஏராளம்! ஏராளம்!
- ஊழியத்தின் வளர்ச்சிக்காக ஜெபிக்க விரும்புகிற பெண்கள் மட்டும் இந்த நாளில் கலந்துக்கொண்டு ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்!

## அன்பரின் ஊழியத்திற்காக ஜெபிக்கும் விசேஷித்த ஜெப கூடுகை

நேரம் : காலை 10:00 மணி முதல் மதியம் 1:30 மணி வரை

ஏப்ரல் 12 சனிக்கிழமை

இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18
தொடர்புக்கு : 0431-2741922, செல் : 9488845627

**தலைமை: Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்**

**Telugu Whats App No. + 91 91770 87860**

## திருச்சியில் அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18

நேரம் :
காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை

நாள்: ஏப்ரல் 26 சனிக்கிழமை

தேவ செய்தியாளர்கள்

**Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

தொடர்புக்கு
செல் : 9488845627,0431-2741922

(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

திருச்சியில் கடைசி சனிக்கிழமையன்று நடைபெறும் குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் பிசாசின் பிடியில் உள்ளவர்களுக்காக, தீராத வியாதி உள்ளவர்களுக்காக மற்றும் பல வேதனைகளால் கஷ்டப்படுகிறவர்களுக்காக ஜெபிக்கப்படும்.

**Tamil Whats App No. + 91 95004 87059**

கன்னியாகுமரி மாவட்டம், அஞ்சுகிராமத்தில்

## அன்பரின் ஊழிய புதிய கிளை அலுவலகம்

வேலை நேரம் : காலை 10:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை
மாலை 5:00 மணிமுதல் இரவு 8:00 மணிவரை

முகவரி : எல்ஷடாய் வீடு, கனி மாடம்,
அஞ்சுகிராமம் போஸ்ட், கன்னியாகுமரி.

குழு பொறுப்பாளர்: Dr. Mrs. ஷீலா தர்மராஜ்.
தொடர்புக்கு: 94421 38245

# We Are Hiring!!

ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Skills Required : Tally ERP 9

Male / Female || Christians Preferred

ministryofjesushr@gmail.com



# அனுதின அற்புதம்



தினமும் காலை 5 மணி

DAILY MIRACLE
MINISTRY OF JESUS

இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து
நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக்
காணலாம்.



ஏப்ரல் 10 வியாழன்

## கோயம்புத்தூரில்

**குடும்பங்களுக்கான தனி ஜெபம்
மற்றும் பங்காளர் சந்திப்பு**

ஹோட்டல் ஆப்பிள் பார்க், அன்சாரிதெரு,
ராம் நகர், கோயம்புத்தூர்

மே 01 வியாழன்

## நாகர்கோவிலில்

**அற்புத குடும்ப
ஆசீர்வாதக் கூட்டம்**

SGS டிலைட் ஹால், பெதஸ்தா காம்ப்ளக்ஸ் மற்றும்
விஜயதா ஹோட்டல் அருகில், WCC ரோடு, நாகர்கோவில்

**காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை**

தேவசெய்தி
**Dr.ஆனந்த ஸ்திரா**

**தொடர்புக்கு : 94888 45627 & 0431 - 2741925**

## தாம்பரத்தில்

மே 01 வியாழன்

## உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

**காலை 9:00 முதல் மதியம் 1:00 வரை**

அன்னை அருள் திருமண மாளிகை வேளச்சேரி ரோடு
கிழக்கு தாம்பரம், சேலையூர், CSI St. மாற்கு சர்ச் எதிரில்
கேம்ப் ரோடு பேருந்து நிறுத்தம், சென்னை-73

**தேவ செய்தியாளர்கள்**

Rev. Dr. A. ஜாஷ்வா , Dr. ஜென் ஜாஷ்வா
Bro.ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா



Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

ஏப்ரல்

**18 19 20**

வெள்ளி, சனி, ஞாயிறு

# கள்ளக்குறிச்சியில்
# சிலுவைப் பெருவிழா

மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை

ஆற்காடு லுத்தரன் ஆலய வளாகம்,
அரசு மருத்துவமனை எதிரில்,கள்ளக்குறிச்சி.



தேவசெய்தியாளர்கள்

Dr. ஆனந்த ஸ்திரா , Mrs. மார்கிரேட் ஸ்திரா
(அன்பரின் ஊழியம், திருச்சி)

தொடர்புக்கு : 94888 45627 & 0431 - 2741925

## திருச்சியில்

ஏப்ரல்

**18 19 20**

வெள்ளி, சனி, ஞாயிறு

பரவசமூட்டும் ஆராதனை!! அனல் பறக்கும் தேவவார்த்தை!!
விடுதலையின் ஜெபம்!!

வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!

LIVE STREAMING MY DELIVERANCE CHURCH

# விடுதலையின் பெருவிழா

மாலை 6:00 மணி

டெலிவரன்ஸ் சர்ச்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் ,10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18



தேவசெய்தியாளர்கள்

Rev. Dr. A. ஜாஷ்வா, Dr. ஜேன் ஜாஷ்வா

கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்
My Deliverance Church YouTube Channel வாயிலாக விடுதலைப் பெருவிழாவை நேரலையிலும் பார்த்து பயனடையலாம்.
வியாதி, சத்துரு போராட்டம், கடன் பாரம், வேலை இல்லாமை மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் துயரப்படும் மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு : 99421 66066 & 94888 45627

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,